# முரசொலி

பக்கங்கள் நான்கு நல்லூர் கிளை நூலகம் விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 64 பிரசோற்பத்தி தை 16 (30-01-1992) வியாழன்


## பயங்கர தாக்குதல்களிடையே அகதிகள் திருமலை வந்தனர்

சென்னையிலிருந்து இரண்டாம் கட்டமாக புறப்பட்ட இலங்கைத் தமிழ் அகதிகள் 659 பேர் நேற்று நண்பகல் திருமலை வந்து சேர்ந்தனர். இதேவேளை கடந்தவாரம் முதலாம் கட்ட அகதிகள் திருமலை வந்துசேர்த்தபோதும் நேற்று இரண்டாம் கட்ட அகதிகள் வந்து சேர்ந்தபோதும் கிழக்கில் பயங்கரத்தாக்குதல்கள் நடைபெற்றுள்ளதை ஏஜென்ஸி செய்திகள் சுட்டிக்காட்டின.

# பொலநறுவையில் அதிரடித் தாக்கு

# 14 ராணுவத்தினர் பலி!

## ஆயுதங்கள் பல மீட்பு 12படையினரைக் காணவில்லை

நேற்றுக்காலை பொலநறுவை வெலிகந்தைப் பகுதியில் இராணுவ ரோந்து அணி மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 14 படையினர் ஸ்தலத்திலேயே பலியாகினர், நான்கு படையினர் காயங்களுடன் தப்பியோடினர், 12 படையினரைக் காணவில்லை பெருமளவு ஆயுதங்களும் படையினரிடமிருந்து கைப்பற்றப்பட்டன.

நேற்றுக்காலை பொலநறுவை மாவட்டம் வெலிகந்த பகுதியிலிருந்து சிங்கபுர இராணுவ முகாமுக்கு 18 பேரடங்கிய இராணுவ அணியொன்று ரோந்து சென்றது.

சிங்கபுர முகாமிலிருந்து ஒரு மைல் தொலைவில் இந்த இராணுவ அணி மீது புலிகள் பாரிய தாக்குதல் ஒன்றைத் தொடுத்தனர்.

சுமார் ஒரு மணி நேரத் தாக்குதலில 14 படையினர் பலியாகினர்.

தாக்குதல் நடைபெற்ற போது படையினருக்கு உதவ சிங்கபுர முகாமிலிருந்து அரைமைல்தொலைவிலுள்ள சிங்கபுர விடுதி இராணுவ முகாம்படையினர் ஸ்தலத்திற்கு விரைந்தனர்.

இந்த அணி மீது புலிகளின்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

பொலநறுவையில் நடைபெற்ற தாக்குதலில் புலிகளினால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்,

★ ஏ.கே. எல் எம் ஜி - 01
★ ஜி - 3, ஏ - 3 துப்பாக்கிகள் - 06
★ ரி - 56 II - 02
★ ரி - 56 I - 02
★ ரி - 81 - 02
★ ஏ. கே. எல் எம் ஜி ரம்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## தமிழக சட்டப் பேரவையிலிருந்து எதிர்க் கட்சிகள் வெளிநடப்பு

தமிழக அரசு தடா சட்டத்தை துஷ்பிரயோகம் செய்வது மற்றும விலைவாசி உயர்வைக் கண்டித்து நேற்று தமிழக சட்டப் பேரவையிலிருந்து எதிர்க்கட்சிகள் சில வெளிநடப்பு செய்தன.

தி மு க. மாக்ஸிய கம்யூனிஸ்ட் ஜனதாதள், இந்திய

— 04 ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் இளைஞர் மீது தாக்கு

வவுனியா தடை முகாமில் இரு தமிழ் இளைஞர்கள் அங்கு நின்ற ஓர் தமிழ் குழுவினால் பலமாக தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் வவுனியா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## டாட்டா விண்ணப்பம்

தோட்டங்களை அரசு தனியார் மயப்படுத்துவதையடுத்து இந்தியாவில் உள்ளபல பிரபல தொழில் நிறுவனங்கள் அவற்றை வாங்க விண்ணப்பித்துள்ளன,

டாட்டா, பிர்லா ஆகிய இரு பெரிய தொழில் நிறுவனங்களும் விண்ணப்பித்துள்ளனர்

இதுவரை 120 வெளிநாட்டு, உள்நாட்டு நிறுவனங்கள் இதற்கு விண்ணப்பித்துள்ளதாக தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

அரசினால் தற்போது நிர்

... 04 ஆம் பக்கம் பார்க்க

## இப்போதைய இனவாதப் பிரசாரம் ஜே.வி.பிக்குவாய்ப்பாக அமைகிறது

சிங்கள மக்களின் பாதுகாவலர்கள் எனக் கூறிக்கொள்ளும் ஒரு குழுவினர் சிறுபான்மையினருக்கு எதிராக எழுப்பும் சுலோகங்கள், பிரசாரங்கள், தொண்டமான் எதிர்ப்பு கோஷங்களும் தென்னிலங்கையில் மீண்டும் ஜே வி. பி இயக்கம் வளர்ச்சியடையவே வழிவகுக்கப் போகின்றது.

இவ்வாறு கொழும்பு பத்திரிகை ஒன்று எச்சரித்துள்ளது

மலையக தமிழர்களுக்கு எதிராக கிழம்பியுள்ள வெறுப்பும் பகைமையுணர்வும் தற்போது யூகோஸ்லேவியாவில் ஏற்பட்ட அழிவுகளை நினைவுபடுத்துகின்றன

சிங்கள தேசத்தின் பாதுகாவலர்கள் எனக் கூறிக் கொள்பவர்கள் நாட்டையும் பௌத்த மதத்தையும் சுய

— 04 ஆம்பக்கம் பார்க்க

## அநுராதபுரத்திலும் 3 படையினர் பலி

அநுராதபுரத்திலும் நேற்று விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் 3இராணுவத்தினர் பலியானதாக இந்திய வானொலி தெரிவித்தது.

அநுராதபுரத்தில் உள்ள ஓர் தடைச் சோதனை முகாம் ஒன்றே புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானதாக அச் செய்தி மேலும் தெரிவித்தது.

## 5 ஜே. வி. பி நபர்கள் கொழும்பில் கைதாம்

நேற்று முன்தினம் கொழும்பில் 5 ஜே. வி. பி தீவிரவாத சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கொம்பனித்தெரு பொலிஸார் நேற்று தெரிவித்தனர்

இவர்களில் ஒருவர் ஜே. வி. பியின் முக்கிய தலைவர் எனவும் இவர் கொழும்பில் பல நகைக் கொள்ளையில் ஈடுபட்டவர் எனவும் கொம்பனித் தெரு பொலிஸார் தெரிவித்துள்ளனர்,

## மகஸீன் சிறையில் இருப்போரை பார்க்க புதிய நடைமுறை

கொழும்பு மகஸீன் சிறைச் சாலையில் தடுத்து வைக்கப் பட்டிருப்போரைப் பார்ப்பதற்கான அனுமதியை இனிமேல் சிறைச்சாலை அத்தியட்சகரிடமிருந்து நேரடியாகப் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள 57 மலையக இளைஞர்கள் தொடர்பான விசாரணை அடுத்த வாரம் ஆரம்பமாகும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது

மகஸீன் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருப்போரைப் பார்ப்பதற்கான அனுமதியை இரகசிய பொலிஸாரிடமே இது வரை பெற வேண்டியிருந்தது.

புதிய ஏற்பாட்டின் படி மகஸீன் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருப்போரைக் கிழமையில் ஒருநாள்பார்வையிடலாம்

—04 ஆம் பக்கம் பார்க்க

## தலைவர்களால் மேடை வழிந்தது மைதானம் வெறிச்சோடியது!

அண்மையில் கொழும்பில் டிமெல் பூங்காவில் புதிய ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினர் நடத்திய அரச எதிர்ப்பு பொதுக் கூட்டத்தில் கூட்டமேடை அரசியல் தலைவர்களால் நிரம்பி வழிந்தது ஆனால் மைதானத்தில் பொதுமக்களைக் காணவில்லையாம்.

லலித் தலைமையிலான இக் கட்சியின் கூட்டத்துக்கு அழைக்கப்பட்ட அனுரா வருகை தந்தபோது வெடிகள் கொழுத்தப்பட்டு அமர்க்களப்படுத்தப்பட்டதாம்.

## மீனவரின் விடுதலை குறித்து அரச அதிபருடன் சந்திப்பு

மூன்று மாதங்களுக்கு முன் கல்முனை - மண்டைதீவுக் கடலில் இராணுவத்தினரால் பிடிக்கப்பட்ட ஆறு மீனவர்களையும், மீன் பிடிப்படகுகளையும் மீட்டுத் தரும்படி யாழ் மாவட்ட அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பாஷையூர் மக்கள் முன்னேற்றச் சங்கச் சனசமூக

— 04 ஆம் பக்கம் பார்க்க

## காரைநகரில் இருப்போர் மீன் மரக்கறி இன்றி பாதிப்பு

காரைநகரில் தங்கியிருக்கும் மக்கள் மீன், மரக்கறி வகைகள் இல்லாமல் பெருங்கஷ்டப்படுவதாக காரைநகரில் இருப்பவர் யாழ்ப்பாணத்தில் இருக்கும் தமது உறவினர்களுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்

அவர்கள் அங்கேபயறு, மைசூர் பருப்பு போன்றவற்றைக் கறிக்கு தினமும் பாவித்து

—04 ஆம் பக்கம் பார்க்க

## சமரஸ முயற்சி நிராகரிக்கப்படுகிறது கனேடிய குழுவினர் கவலை

"போரை நிறுத்தும் ஆர்வம் எவரிடமும் காணப்படவில்லை நாம் பல தரப்பினருடனும் பேச்சு நடத்தியபோது சமாதான முயற்சிகள் நிராகரிக்கப்பட்டன இவை எமக்குக் கவலை தருகிறது."

இவ்வாறு இலங்கையில் தமது எட்டுநாள் விஜயத்தை முடித்துக்கொண்ட கனேடிய அவதானிப்புக்குழு நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தனர்.

சர்வதேச மன்னிப்புச்சபையின் சிபார்சுகளை ஏற்றுக் கொண்டதாக ஸ்ரீலங்கா அரசு அறிவித்தபோதிலும் இன்னமும் பலர் காணமற் போகின்றனர். கண்டபடி கைதாகின்றனர், விசாரணை

—04 ஆம் பக்கம் பார்க்க

★ தராதரம், திறமைக்கே இனி முதலிடம்

# அரச நியமனங்களில் முறைகேடென்றால்

# நீதிமன்றம் செல்லலாம்!

## புதிய சட்ட யாப்பு அதற்கு வழிகோலுகிறது

அரசாங்க நியமனங்களுக்கு முற்றிலும் தராதரம், திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்பை மேற்கொள்வதற்கு ஏதுவாக அரசியல் யாப்பில் அதனை ஒரு விதியாகச் சேர்க்க நடவடிக்கையெடுக்கப்படுவதாக அறியப்படுகின்றது.

விரைவில் இச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இதன்படி புதிய நியமனங்கள் அனைத்தும் தராதரம், திறமை அடிப்படையில் மேற்கொள்ளப்படுதல் இனிமேல் சட்டப்படி கட்டாயமாக்கப்படுகின்றது.

அத்துடன் இனிமேல் அரச சேவைக்கு நியமிக்கப்படும் ஒருவர் தகுதியற்றவர் எனக் கருதப்படும் பட்சத்தில் அந்த நியமனத்தை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்ய இச் சட்டமூலம் பொதுமகன் ஒருவனுக்கு அனுமதி வழங்குகிறது.

கடந்த காலங்களில் முக்கிய நியமனங்களில் அரசியல் செல்வாக்கே முக்கிய இடம் வகித்தமையும், இப் புதிய சட்டமூலத்தினால் இந்த நடைமுறை முடிவுக்கு வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## இவ்வருட தமிழ்மொழித் தினம் ஜூலை 19 இல் நடைபெறும்!

இவ்வருடத்திற்குரிய தமிழ் மொழித்தினம் தேசிய மட்டத்தில் சுவாமி விபுலாநந்தர் பிறந்த தினமாகிய ஜூலை 19-ம் திகதி நடைபெறவுள்ளதாக கல்விஉயர்கல்வி அமைச்சின் தமிழ்மொழிப் பிரிவுக்கல்விப்பணிப்பாளர் வெ. சபாநாயகம் அறிவித்துள்ளார்.

பெப்ரவரி 15-ம திகதிக்கு முன்னர் பாடசாலை மட்டத்திலும், மார்ச் 5-ம் திகதிக்கு முன்னர் கோட்டமட்டத்திலும், மே 25-ம் திகதிக்கு முன்னர் மாகாண மட்டத்திலும் போட்டிகள் நடாத்தப்படவேண்டும். தேசிய தமிழ் மொழிதினம் நடைபெறும் இடம் பின்னர் தெரிவிக்கப்படும்.

போட்டிகள் யாவும் ஆண்டு 4 5,6,7,8,9, 10, 11, 12 13 வகுப்புக்களில் கற்கும் மாணவ மாணவிகளுக்கிடையே தனிப்பட்ட ரீதியிலும் குழுவாகவும் நடாத்தப்படும்.

வாசிப்பு சொல்வதெழுதல், எழுத்து ஆக்கம், கட்டுரை கவிதை, சிறுகதை, பேச்சுஎன்பவற்றில் தமிழ் மொழியில் போட்டிகள் நடாத்தப்படும்.

பாடசாலை நிலை, கோட்ட நிலை மாகாணநிலையில் போட்டிகள் நடாத்தப்பட்டு முதல் மூன்று இடங்களைப்பெறும் போட்டியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும். மாகாணநிலையில் ஒவ்வொரு பிரிவிலும் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் முதல ம்இடங்களைப் பெற்ற நிகழ்ச்சிகள் தேசிய நிலை போட்டிக்கு அனுப்பப்படவேண்டும். (15)

## 15 தொழிலநுட்பப் பாடங்களுள் ஒன்றினைப் பயிலுதல் அவசியம்

ஆண்டு 9 கனிஷ்ட தொழில் நுட்பத் தராதரப் பத்திரப் பாடநெறியைப் பயின்று, 1991 இல் உரிய பரீட்சைக்குத் தோற்றி 1992 இல் ஆண்டு 10 இற் புகும் மாணவர்கள் தற்போது ஆண்டுகள் 10, 11 இல் நடைமுறையில் உள்ள 15 தொழில நுட்பப் பாடங்களுள் ஒன்றினைப் பயிலுவதற்கும் க. பொ. த. (சா. த) பரீட்சையில் அப்பாடத்திற் தோற்றுவதற்கும் அனுமதிக்கப்படுதல் வேண்டும் எனக் கல்வி உயர் கல்வி அமைச்சின் செயலாளர் சுற்றுநிருபம் மூலம் பணித்துள்ளார்.

இப் பாடங்களைக் கற்பிக்கையில் தற்போது நடைமுறையில் உள்ள க. பொ த (சா. த) பாடத்திட்டம் பயன்படுத்தப்படல் வேண்டுமெனவும், தொழில் நுட்பப் பாடங்களைக் கற்பிக்கையில் சாத்தியமான போதெல்லாம் மாணவர்கள் செயன்முறைத் தொழிற்பாடுகளில் ஈடுபடுத்தப்படுதல் வேண்டுமெனவும் அதிபர்கள் பணிக்கப்பட்டுள்ளனர் (15)

## 5 கல்விக் கல்லூரி

இலங்கையில் 5 இடங்களில் கல்விக் கல்லூரிகள் தற்போது இயங்கி வருகின்றன.

பண்டாரவளை, மீரிகம, பொல்கொல்ல, அக்குறஸ்ஸ, களுத்தற, நித்தம்புவ, வெயாங்கொட ஆகிய இடங்களில் இக்கல்விக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. (15)

## ஐக்கிய அணி தகுதி பெற்றது

அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் திருமகள் சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நடத்தும் வலைபந்தாட்டத்தின் அரை இறுதி ஆட்டம் ஒன்றில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி அதனை எதிர்த்து ஆடிய குருநகர் சென்றோக் அணியை 23:10 என்ற புள்ளிகள் கணக்கில் வென்று இறுதிஆட்டத்தில் ஆடத் தகுதி பெற்றுள்ளனர்.

## தொலைக்கல்விப் பயிற்சி பெற பயிலுநர் ஆசிரியர்க்கு கடமைலீவு

பயிலுநர் ஆசிரியர்களாக உள்ள ஆசிரியர்களில் தொலைக்கல்விப்பயிற்சியைத் தொடர்ந்து கொண்டிருப்பவர்களுக்கு மாதத்தில் இரு தடவைகள் வெள்ளிக்கிழமைகளில் கடமை லீவை வழங்குமாறு வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சகல கோட்டக்கல்வி அதிகாரிகளையும் பணித்துள்ளார்.

பாடசாலை நடவடிக்கைக்கு எதுவித இடையூறும் ஏற்படாதவகையில் குறிப்பிட்ட தினங்களில் பாடசாலைநேரத்தில் காலையில் அல்லது மாலையில் மூன்று மணி நேரம் இக்கடமைலீவை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் அவர் கேட்டுள்ளார் (15)

## மாணவர் மதிய உணவுக்கு தினம் ஒரு கோடி ரூபா செலவு

பாடசாலை மாணவருக்கு மதிய உணவு வழங்குவதற்காக அரசு நாளொன்றுக்கு ஒரு கோடி 26 இலட்சத்து, 91 ஆயிரத்து 914 ரூபாவை செலவிடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளொன்றுக்கு சராசரி 4 இலட்சத்து, 23 ஆயிரத்து. 638 பிள்ளைகளுக்கு மதிய உணவு வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



ஜெசிந்தா பாலகிருஷ்ணன்

மலர்வு 14. 05. 82 உதிர்வு 29. 01. 88

திதி: 30 - 01 - 92

தேடி வந்த பைங்கிளியே - எம்மை
தழுவி நின்ற பூங்கொடியே
கோடியின்பம் அள்ளித் தந்தே-உள்ளம்
கொள்ளை கொண்ட முழு நிலவே
ஓடியே தான் நீ மறைந்து - அம்மா!
இன்று நான்கு வருடமம்மா!
வாடியே தான் நிற்கின்றோம் - மனதில்
வாழு துந்தன் உருவமம்மா!

பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, அக்கா,
அண்ணாமார், உற்றார், உறவின.

வி. பாலகிருஷ்ணன்
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

01080

## இன்று ஜனவரி 30 இந்நாள்...

## அதிகாரமிழக்கும் தமிழக அரசுகள்!

இந்திய மைய அரசோடு முரண்பட்ட போதெல்லாம் தமிழக அரசுகள் ஏதோ சில காரணங்கள் காட்டிக் கலைக்கப்பட்டன.

நான்கு தடவைகள் கலைக்கப்பட்ட தமிழக அரசுகளில் மூன்று ஜனவரி 30 ஆம் திகதியே கலைக்கப்பட்டிருக்கின்றன. தமிழக அரசுக்கும் ஜனவரி 30 க்கும் என்ன பொருத்தமின்மையோ தெரியவில்லை!

- ★ 1976, ஜனவரி 30- கலைஞர் கருணாநிதி தலைமையிலான தி. மு. க. அரசு கலைக்கப்பட்டது.
- ★ 1988, ஜனவரி 30 -ஜானகி இராமச்சந்திரன் தலைமையிலான அ. தி. மு. க, அரசு கலைக்கப்பட்டது
- ★ 1991, ஜனவரி 30- கலைஞர் கருணாநிதி தலைமையிலான தி. மு. க. அரசு கலைக்கப்பட்டது-

எம் ஜி. ஆர். தலைமையிலான அ தி. மு, க ஆட்சிக் கலைப்பு மட்டும் 1980 பெப்ரவரி 17-ம் திகதி நடைபெற்றது.

## கூட்டம்

மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் இன்று 30-ம் திகதி வியாழக் கிழமை காலை 11 மணிக்கு யாழ் செயலக மகாநாட்டு மண்டபத்தில் யாழ் அரச அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (25

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1992-02-28 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. நுண்ணுயிரியலில் உதவி விரிவுரையாளர்/தற்காலிக உதவி விரிவுரையாளர்.
2. மிருக விஞ்ஞானத்தில் தற்காலிக உதவி விரிவுரையாளர்,

### சம்பள அளவுத் திட்டம்:

உதவி விரிவுரையாளர்:- ரூபா 3,900/- மாதமொன்றுக்கு (நிலையானது) ஓராண்டுத்திருப்திகரமான சேவையை நிறைவு செய்த பின்னர் துணைவேந்தர் ரூபா 4,500-10×200- 6,500/- (மாதமொன்றுக்கு). சம்பள அளவுத் திட்டத்தில் 4.500/- சம்பளப் படியில் வைப்பார்.

தற்காலிக உதவி விரிவுரையாளர் ரூபா 3,900/- மாதமொன்றுக்கு (நிலையானது).

1 மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களையும் இதர விவரங்களையும் இப்பல்கலைக்கழகத் தாபனக் கிளையின் உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

2. விண்ணப்பப் படிவங்களைத் தபாலில் பெற விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களிற்கான வேண்டுகோளுடன் 23×10 ச மீற்றர் அளவுடைய சுய முகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை இணைத்தனுப்பப்படல் வேண்டும்.

3 அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் என்பனவற்றில் உள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்,

4. ஒரு பதவிக்கு மேல் விண்ணப்பிக்க விரும்புவோர் தனித் தனி விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

5. தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992-01-27 01078

நீண்ட ........ கடிதம் + சமாதான முயற்சி

# கின்னஸ் சாதனை பெற்ற தமிழருக்கு நோபல் பரிசுப் பட்டியலிலும் இடம்!

நோபல் சமாதானப் பரிசுக்கு கேரளத் தமிழர் ஒருவரின் பெயர் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது

தமிழகம் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த ரீகன் ஜோன்ஸ் என்னும் இந்தத் தமிழர் தற்பொழுது கேரளம் கிராஸ்பி என்ற இடத்தில் வசித்து வருகிறார்.

ரீகன் ஜோன்ஸ் உலக சமாதானம் பற்றி போப்பாண்டவருக்கு 24 கிலோ மீட்டர் நீளமும் 3 அடி அகலமும் உடைய நீண்ட கடிதம் எழுதினார். 10 கோடி ஆங்கில வார்த்தைகளைக் கொண்ட இந்தக் கடிதத்தின் எடை 100 கிலோ ஆகும்.

நாள்தோறும் 10 மணி நேரம் வீதம் 4 வருடங்கள் எழுதி முடித்த இந்தக் கடிதத்தில் உலகத் தலைவர்கள் 101 பேரின் படங்களும் வரையப்பட்டுள்ளன.

இக் கடிதத்தை எழுதி முடிக்க 83 ஆயிரத்து 58 ரூபாய் செலவானது. உலக சமாதானம் பற்றி நீண்ட கடிதம் எழுதிய ரீகன் ஜோன்ஸ் கின்னஸ் புத்தகத்திலும் இடம் பெற்றிருந்தார்-இப்பொழுது நோபல் சமாதானப் பரிசுப் பட்டியலிலும் இடம் பெற்றுள்ளார்.

# அதிபர்கள் அதிகாரிகள் பிள்ளைகளுக்கு தொண்டர் ஆசிரியர் நியமனம்! பொறுப்பான அமைச்சரே அம்பலப்படுத்துகிறார்

தொண்டர் ஆசிரியர் நிரந்தர நியமனம் குறித்து கல்வி அமைச்சுக்கும் பொறுப்பான இராஜாங்க அமைச்சரே அதிருப்தி தெரிவித்திருக்கிறார்.

தொண்டர் ஆசிரியர்களாக நிரந்தர நியமனம் பெற்றுள்ளோரில் அநேகமானோர் கல்வி அதிகாரிகளதும், பாடசாலை அதிபர்களதும் பிள்ளைகளே எனவும், பொறுப்பான அதிகாரிகளே இந்த முறைகேட்டில் ஈடுபட்டிருக்கிறார்களெனவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி இராஜமனோகரி புலேந்திரன் அண்மையில் மட்டக்களப்புக்கு விஜயம் செய்திருந்தவேளை கல்வி அதிகாரிகள் மத்தியில் உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்திருக்கிறார்.

## (28க்கு32); பாடசாலையை ஆக்கிரமிக்கும 'தொண்டர்' படை!

பாடசாலையில் நிரந்தர ஆசிரியர்களுக்கு உதவியாக ஒரு சில தொண்டர் ஆசிரியர்களை நியமிக்கும் நடைமுறையை சில அதிபர்களும், கல்வி அதிகாரிகளும் மீறியிருக்கிறார்களாம்.

ஒரு குறிப்பிட்ட பாடசாலையில் 28 நிரந்தர ஆசிரியர்கள் கடமைபுரியும் அதேவேளையில் அப்பாடசாலைக்கு அதிபரினதும், கல்வி அதிகாரிகளின் 'ஆசி' யுடன் 32 தொண்டர் ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்களாம்.

அண்மையில் மட்டக்களப்பில் கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி இராஜமனோகரி புலேந்திரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

## தினமும் 20 படகுகளில் மன்னாருக்கு 'அகதிகள்!

தமிழகத்திலிருந்து தலைமன்னாருக்கு அகதிகளை ஏற்றி வரும் நடவடிக்கை பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

சுமார் 13ஆயிரம் பேர் மன்னார் வழியாக இலங்கை திரும்பவுள்ளனர்.

இவர்கள் தமிழகத்திலிருந்து மீன்பிடிப் படகுகளிலேயே இங்கு அழைத்து வரப்படவுள்ளனர்.

தினமும் 10 முதல் 20 படகுகள் அகதிகளை இலங்கைக்குக் கொண்டுவரும் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

## மலையகத்தில் தேடுதல்போர்வையில் தமிழர்களின் வீடுகளில் கொள்ளை!

மலையகத்தில் தமிழர்களின் வீடுகளில் தேடுதல் என்ற பெயரில் கொள்ளைகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவச்சீருடையில் வருவோரே இந்தச் சம்பவங்களில் ஈடுபடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சில தினங்களுக்கு முன்னர் பதுளையில் ஸ்பிரிங் வெளி தோட்டத்திலுள்ள தமிழர் ஒருவருடைய வீட்டுக்கு இராணுவச் சீருடையில் வந்த ஒரு கோஷ்டியினர் வீட்டினுள் தேடுதல் செய்யப் போவதாகக் கூறிவிட்டு அங்கிருந்த 40 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கநகை, ரொக்கம் என்பவற்றைச் சூறையாடிச் சென்றுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

## மதிய உணவு முத்திரைக்கு கொப்பி, பென்சில் இனி இல்லை!

பாடசாலை மாணவர்களின் மதிய உணவுக் கூப்பன்களுக்கு இனிமேல் அப்பியாசக் கொப்பிகள், பென்சில்கள் என்பன வழங்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களே மதிய உணவு முத்திரைகளுக்கு வழங்கப்படுமெனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## கிராமிய மட்டத்தில் பனை அபிவிருத்திப் பயிற்சி!

பனை அபிவிருத்திச் சபை கிராம மட்டத்தில் பனங்கைப்பணிப் பயிற்சி நிலையங்களை நடாத்தவுள்ளது.

கிராமிய ரீதியில் அபிவிருத்தி, பயிற்சித் துறைகளில் ஆர்வம் காட்டும் பொது நிறுவனங்களுடன் இணைந்து இப் பனங்கைப்பணிப் பயிற்சிகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளைப் பனை அபிவிருத்திச் சபை மேற்கொண்டுள்ளது.

## கொக்கட்டிச்சோலை அசம்பாவிதம் ஆணைக் குழு விசாரணைகள் பூர்த்தி!

கொக்கட்டிச்சோலை அசம்பாவிதங்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகள் முடிவடைந்துள்ளன.

மட்டக்களப்பிலும் கொழும்பிலுமாக 33 நாள்கள் இந்த விசாரணைகள் இடம்பெற்றன.

186 பேர் விசாரணைகளில் சாட்சியமளித்தனர். கொக்கட்டிச்சோலையில் 12 6.91-ல் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கென நியமிக்கப்பட்ட இவ் ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக முன்னாள் நீதியரசர்கள் ஏ. எம். எம். செனிவிரட்ன (தலைவர்), சிவா செல்லையா, டாக்டர் எம். எம். எம். சகாப்தீன் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

## 'அங்கே தாக்குவார் இங்கே தங்குவார்!'

கர்நாடகத்தில் தமிழர்கள் மீது தாக்குதல் நடாத்தப்படுவதைக் கண்டித்து கொதித்தெழுந்து விட்டார் தமிழக நடிகர் சத்யராஜ்! அதுவும் அவருடைய குறி - கன்னட நடிகர் ராஜ்குமார் மீது!

''அங்கே பிரச்சினையைக் கிளப்பி விட்டுத் தமிழர்களைத் தாக்குவாங்க. தமிழ்ப் படம் ஓடற தியேட்டர்களை அடித்து நொறுக்குவாங்க. அவரு (ராஜ்குமார்) இங்கே வந்து மெட்ராஸில இருக்கிற வீட்டுல ஹாயா ரெஸ்ட் எடுத்துக்கிட்டு இருப்பாரு.... இது என்ன நியாயம்...?'' என்று கொதிக்கிறார் நடிகர் சத்யராஜ்.

நேற்றைய தொடர்ச்சி

# ஒரு பொருளாதார முறையின் குழப்பம் -2

எஸ்.ஜி.எம்.

அமெரிக்கப் பொருளாதாரச் சிக்கலிலிருந்து விடுபட ஜனாதிபதி புஷ் கடினமாக முயன்று கொண்டிருந்தாலும் ஜப்பானிய அணுகுமுறை அதற்கு அதிகம். சாதகமானதாக அமையவில்லையென்றே கூற வேண்டும்.

ஜப்பானியப் பிரதமர் கிச்சி மியாஷவா அமெரிக்கா தற்போதைய பிரச்சினைகளிலிருந்து விடுபட ஜப்பான் உதவிக்கரம் நீட்ட வேண்டும் எனப் பகிரங்கமாகக் கூறியபோதும், அவரது எல். டி. பி. கட்சிக்குள்ளேயே அதற்கு ஆதரவு கிடைப்பது கஷ்டமாகவிருந்தது. அத்துடன் விவசாயிகள் அமெரிக்காவின் விற்பனை அழுக்கத்திற்கு ஜப்பானியர் ஏன் ஆளாக வேண்டும் எனக் கேட்டனர்.

அநேகமான ஜப்பானிய மோட்டார் வாகன நிபுணர்கள், அமெரிக்க உற்பத்தியாளர்கள் அதிகளவு சந்தை ஆராய்ச்சிகள் செய்ய வேண்டுமென வற்புறுத்தினர்.

மேலும் 'கிறிஸ்லர் கார்ப்பரேஷன் தனது மோட்டார் கார்களை அமெரிக்கர்களுக்கே விற்க முடியாதிருக்கையில் அவற்றை எப்படி ஜப்பானியர்களுக்கு விற்க முடியும் என எதிர்பார்க்கின்றனர்' என அவதானி ஒருவர் கருத்துத் தெரிவித்தார் இந்தக் கார்ப்பரேஷனின் தலைவர் லீ லக்கோக்கா ஜனாதிபதியுடனான தமது சுற்றுப்பயணத்தைச் சடுதியாக இடை நிறுத்தி நாடு திரும்பி விட்டார்.

''நாங்கள் அடக்கமாகவே செயற்பட வேண்டியுள்ளது அமெரிக்க மற்றும் ஜப்பானிய அரசாங்கங்கள் செய்யக் கூடியவை மிகவும் மட்டுப்படுத்தப்பட்டவை'' என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என ஜப்பானின் சர்வதேச வர்த்தக அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதியின் ஜப்பானிய சுற்றுப்பயணம் ஒரு தோல்வியென அமெரிக்காவில் தொழில் புரியும் ஜப்பானியர்கள் கூறியுள்ளனர். இந்தச் சுற்றுப் பயணம் ஜப்பானியப் பிரதமருக்கே உதவியளித்துள்ளது ஜோர்ஜ் புஷ்ஷுக்கு அல்ல என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது

அமெரிக்காவின் கிறிஸ்லர் கம்பனியின் தலைவர் லக்கோக்கா ஜப்பானிய வர்த்தகர்கள் அமெரிக்க உற்பத்தி மோட்டார் கார்களின் தரத்தை எவ்வாறு உயர்த்தலாம் என வழங்கிய ஆலோசனைகளை நிராகரித்ததையும் ஜப்பானிய அவதானிகள் கண்டித்தனர்.

அமெரிக்க மோட்டார் உற்பத்தித் தொழிலின் இன்றைய நிலைக்கு லக்கோக்கா தம்மைத் தாமே நொந்து கொள்ள வேண்டுமென இன்னுமொரு பிரபல்ய முகாமைத்துவ மற்றும் நிதியியல் பத்திரிகையின் ஜப்பானிய நிருபர் கூறினார்.

இன்னுமொரு ஜப்பானிய அதிகாரி கருத்துத் தெரிவிக்கையில் அமெரிக்கப் பொறியியல் கல்லூரிகள் இன்னும் சிறந்த பொறியியலாளர்களை உற்பத்தி செய்கின்றன. ஆனால் அவர்களை அமெரிக்கத் தொழில் நிறுவனங்கள் உபயோகப்படுத்துவதில்லை. மாறாக ஜப்பானிய மோட்டார் உற்பத்தியாளர்களே அவர்களை உபயோகிக்கின்றனர் என்று கூறியதுடன்,

மோட்டார்த் தொழில் இந்த அளவுக்கு நலிந்திருக்கையில் அமெரிக்க உயர் தொழில் அதிகாரிகள் எவ்வாறு பெருந் தொகையான வேதனத்தைப் பெறலாம் என்ற கேள்வியையும் எழுப்பினார்.

இதே நேரம் அமெரிக்காவின் கொக்கோலா, லெவி ஜீன்ஸ், மற்றும் அம்வே ஆகிய கம்பனிகள் ஜப்பானியச் சந்தையில் குறிப்பிடத்தக்க அளவு திறம்படச் செயல்படுவதும் குறிப்பிட்டுக் காட்டப்பட்டது. இவையெல்லாம் பொருளதார ரீதியில் ஜப்பானிடம் அமெரிக்கா வீழ்ச்சி அடைவதையே சுட்டி நிற்கின்றது.

எனவே ஜப்பான்நாட்டின் உலகஆதிக்கம் தவிர்க்க முடியாததும் மாற்ற முடியாததுமாக அமைந்து விட்டதையே பல ஆய்வாளர்கள் அவதானிக்கின்றனர்.

ஜப்பானிய வளர்ச்சி பற்றி முன்னாள் அமெரிக்க இராஜதந்திரி றிச்சாட் கொஸ்புறாக் கருத்துத் தெரிவிக்கையில்:

அமெரிக்கர்கள் முன்பு பெருமையடித்துக் கொண்ட பல விடயங்களில் ஜப்பான் இப்போது திறமை பெற்று விட்டது. தரமான பொருள்கள், கடின உழைப்பு, தியாகம், பலமான குடும்பக் கட்டமைப்பு, தேசிய ஒற்றுமை உணர்வு மற்றும் தேசப்பற்று ஆகிய அம்சங்களை முக்கியமாகக் குறிப்பிடலாம் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்

1989 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் ஜப்பானிய முன்னாள் வெளியுறவு அமைச்சர் சபுறு ஒகிற்றா எழுதிய ஒரு கட்டுரையில், 1990 ஆம் ஆண்டுக்கான பொருளாதார மற்றும் இராணுவக் கொள்கைகளைத் திட்டமிடுகையில் உலகில் அதிகரித்து வரும் ஜப்பானின் முக்கியத்துவத்தையும், பங்கையும் ஜனாதிபதி புஷ் கவனத்திற்கெடுக்க வேண்டும்.

பாரிய பொருளாதார வெற்றியை உலகளாவிய ரீதியில் கண்டுள்ள ஜப்பானின் அமைதியான பலத்தையும், மறைமுகமான செல்வாக்கையும் உணர்ந்து கொள்ளா விட்டால், அமெரிக்கர்கள் ஆபத்தையே எதிர்நோக்குவர் என்று சுட்டிக் காட்டியுள்ளார்,

பொருளாதார ரீதியில் மட்டுமல்ல இராணுவ ரீதியிலும் ஜப்பான் முன்னேற முயல்வதை அந்நாட்டு நாடாளுமன்றம் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்பு தனது இராணுவத்தை நாட்டுக்கு வெளியே ஐ. நா. சமாதானப் படையுடன் சேர்ந்து கொள்ளத் தீர்மானம் இயற்றியமை காட்டுகிறது

ஜப்பானிய இராணுவம் வெளிநாடுகளில் நிலை கொள்வது வரலாற்று ரீதியாகப் பார்க்கையில் விரும்பத்தக்கதல்ல என சீனத் தலைவர் யாங் சாங் குன் எச்சரித்துள்ளார்.

...04 ஆம் பக்கம் பார்க்க

# வர்த்தக ஊழியர் சங்க நல்லூர் கிளை தீர்மானம்

வர்த்தக நிறுவனங்கள் ஊழியர்களுக்கு அடிப்படைச் சம்பளமாக இரண்டாயிரம் ரூபாவை வழங்கவேண்டுமென்று கோரும் தீர்மானம் வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்கத்தின் நல்லூர் பிரதேசக் கிளை அங்குரார்ப்பணக் கூட்டத்தில நிறைவேற்றப்பட்டுள்ளது

இவ் அங்குரார்ப்பணக் கூட்டம் வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்கப் பொதுச் செயலாளர் ச. தியானேஸ்வர சர்மா தலைமையில் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெற்றது

இக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன.

☐ ஊழியர்கள் சம்பளப்பட்டியல், லீவுப் பதிவேடு, சேமலாபநிதி, நம்பிக்கை நிதியம் செலுத்திய ஆவணங்கள் பார்வைக்கு வர்த்தக நிறுவனங்களில் வைத்திருத்தல் வேண்டும்.

☐ ஆறு மாதத்திற்கு மேற்பட்ட ஊழியர்களை நிரந்தரமாக்கி மாதச் சம்பளம் வழங்கவேண்டும்.

ஊழியர்கள் கடமைநேரம் காலை ஆறு மணி முதல் மாலை நான்கு மணிவரை இருக்கவேண்டும். (14)

## இப்போதைய—

தேவைக்கு பாவிக்கின்றனர் என குற்றம் சுமத்தும் அப் பத்திரிகை பல்கலைக் கழகங்களில் கொந்தளிப்பை ஏற்படுத்துவதனால் ஜே. வி. பி மீண்டும் புத்துயிர் பெறவழி வகுக்கும் எனக் குறிப்பிட்டுள்ளது.

1986, 1987 ஆண்டுகளில் இனவாத முழக்கங்கள், அதிகார பரவலாக்கத்துக்கு எதிராக எழுந்த பிரசாரங்களே ஜே. வி. பியை அப்போது உச்சிக்கு கொண்டு சென்றுவிட்டது எனவும் அப்பத்திரிகை சுட்டிக்காட்டுகிறது.

முயற்சியில் தோல்வியடைந்துள்ள ஜே. வி. பிக்கு இப்போது நிகழும் இனவாத பிரசாரங்கள் அருமையான ஓர் சூழ் நிலையை உருவாக்கிவருகிறது

இனவாதத்தினால் யதார்த்தத்தை மறந்து விடுவதன் மூலம் நாட்டில் பேரழிவே ஏற்படவுள்ளது எனவும் அப் பத்திரிகை எச்சரிக்கை விடுத்துள்ளது

## சமரஸ...

யின்றி தடுத்து வைக்கப்படுகின்றனர் சித்திரவதை கொலை இன்னும் தொடர்கிறது. என கனடா அவதானிப்புக் குழுவில் அங்கம் வகிக்கும் கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டார்.

தமது விஜயத்தின்போது காணமற்போனோரின் உறவினர்கள் தம்மிடம் 500 மகஜர்களை இது தொடர்பாகத் தந்தனர் எனவும் இவற்றை தாம் ஓர் அமைச்சரிடம் சமர்ப்பித்ததாகவும் கனேடியக் குழுவினர் செய்தியாளர் மாநாட்டில் சுட்டிக்காட்டினர்

கனடா திரும்பும் இக்குழுவினர் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி தமது அறிக்கையை கனடாவில் பகிரங்கமாக வெளியிடவுள்ளனர்.

பெப்ரவரி 7 ஆம் திகதி பாரிஸில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் கனடாவும் அங்கம் வகிப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஒரு பொருளாதார......

இவை எல்லாவற்றையும் பார்க்கையில் பரந்த அளவில் ஒரே பொருளாதாரக் கோட்பாட்டைக் கடைப்பிடிக்கும் ஜப்பானும் அமெரிக்காவும் சம நிலையை நிலைநிறுத்த முடியாது போய்விட்டதை வெளிப்படையாகக் காட்டுகிறது

அமெரிக்காவின் வீழ்ச்சியும் ஜப்பானின் வளர்ச்சியும் அப்பட்டமாகவே தெரிகிறது

ஆகவே இந்நாடுகளும் அதே பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றும் ஏனைய நாடுகளும் தமது கொள்கைகளில் மாற்றம் செய்யவேண்டியமை பற்றி ஆராயவும் சிந்திக்கவும் வேண்டிய உடனடி அவசியம் எழுந்துள்ளது

நாடுகளின் பொருளாதார சம நிலையைப் பேணக் கூடிய சில கோட்பாட்டு உள்ளேடுகள் தற்போதைய பொருளாதாரக் கொள்கைகளுடனும் கோட்பாடுகளுடனும் உள்ளடக்கப்படாவிட்டால் இவையும் தோல்வியையே தழுவிக் கொள்வது தவிர்க்கமுடியாததாகிவிடும்.

திருத்தம்:- நேற்றைய இதழில் வெளிவந்த இக்கட்டுரையில் 41 மில்லியன் என்றிருப்பது 41 பில்லியன் ஆகும்.

## பனங் கைப்பணிப் பயிற்சி வழங்கல்.

1992-ம் ஆண்டு காலப் பகுதியில் பனை அபிவிருத்திச் சபையுடன் இணைந்து கிராமிய மட்டத்தில் பனங்கைப்பணிப் பயிற்சிகளை மேற்கொள்ள விரும்பும் பொது நிறுவனங்கள் எதிர்வரும் 10-02-92-ம் திகதிக்கு முன்னர் சபையில் பதிவு செய்து கொள்ளவும்.

தொடர்பு:-

தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை
தேசியவீடமைப்புச் செயலகம்,
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

01075

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்கல்வியங்காடு டச்சுவீதி'லஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 30-01-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

★ வடமராட்சி நிவாரண நிதியில் சிங்கள குடியேற்றம்

★ வடகிழக்குக்கு வாங்கிய மருந்துகள் எங்கே?

# சர்வோதய இயக்கத்தின் இனவாதச் செயற்பாடுகள்

வடமராட்சி இராணு நடவடிக்கையின்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கும் வடகிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் நிவாரணம் என்ற பெயரில்; திட்ட இலக்கம் 14A நிதிநிறுவனங்களிடம் இருந்து பெறப்பட்ட மொத்தப் பணம் "10 மில்லியன்" ரூபா வடமராட்சிக்குச் செலவழித்ததாக கணக்குக் காட்டப்பட்ட மொத்தத் தொகை "1.7 மில்லியன்" வடமராட்சிப் பகுதி என வன்னியில் பதவியாவைக் காட்டி குடியேற்றத்திற்கு செலவழித்த தொகை "6 5 மில்லியன்" ரூபா வடமராட்சி எங்கே? வன்னி எங்கே? பதவியா எங்கே? நிதி நிறுவனத்திற்கு இது தெரியாதா?

இவ்வாறு சர்வோதய இயக்கத்தின் இனவாதச் செயற்பாட்டை விளக்கி வடகிழக்கு நலன் பேணும் மக்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

திருகோணமலையில் இராணுவ இணைப்பதிகாரியின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் நடந்த குடியேற்ற நடவடிக்கையில் மட்கோவிலும் பாலையூற்றிலும் கட்டப்பட்ட நாற்பத்தொன்பது வீடுகளிலும்; தமிழர் அகலதோரைக் குடியேற்றி சமையல் பாத்திரங்கள் முதல் தளபாடங்கள் மற்றும் ஆறு மாதத்திற்கு தேவையான நிவாரணமும் பேரினவாதிகளான சர்வோதயத்தினரால் வழங்கப்பட்டுள்ளது.

இந் நடவடிக்கையில் சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரி பின்னர் கண்ணிவெடியில் சிக்கி உயிரிழந்தார் என்பதும் இக்குடியேற்றம் நிகழ்ந்துள்ள நிலம் தமிழர் பூர்வீகமாக வாழ்ந்த பகுதி என்பதும் குறிப்பிடத்தக்கது

அம்பாறையில் படையினரின் உதவியுடன் தமிழ் மக்களின் காணிகளில் பெரும்பான்மை இனத்தவர்களைக் குடியேற்றி பயிர்ச்செய்கைக்கும் உதவி வழங்கியுள்ளது.

1990 ஜூனுக்குப் பின்னர் வடகிழக்கற்குரிய 29/A திட்ட நிதியிலிருந்து வாங்கப்பட்ட 2பிக்கப், 2லொறி, 1அம்புலன்ஸ் இவைகள் எங்கே?

ஆரியரத்தினாவின் மனைவியின் அமைப்பான "சுவசித்தா (இனவாத சர்வோதயத்தின் மற்றுமோர் கிளை) வடகிழக்கு நிதியிலிருந்து வடகிழக்கிற்கென வாங்கிய ரூபா 10 லட்சம் பெறுமதியான துறைமுகத்தில் அடைக்கப்பட்ட மீன் 15 லட்சம் ரூபாவுக்கு வாங்கப்பட்ட மருந்துகள் யாவும் விநியோகம் செய்தது எங்கே?

வவுனியாவில் நிவாரண வேலைக்கும் தற்காலிக குடிசை அமைப்பதற்கும் வந்த பணத்தில் இருந்து முறைகேடாக தலைமைப் பணிப்பாளரின் விமானப் பயணத்திற்கு பணம் வழங்கப்பட்டபோது வடக்கு வெளிக்கள இயக்குனர் ஏன் கண்டிக்கவில்லை?

இப்படி ஆதாரங்களுடன் எத்தனையோ......இன்னும் பிடிபடாமல் ஆதாரம் இல்லாமல் எத்தனையோ? மொத்தத்தில் மோசடிகள், ஊழல்கள், முறைகேடுகள் குவைதான் பேரினவாத சர்வோதயம் இதன் பின்னரும் வடகிழக்கில் இனவாத சர்வோதயம் தேவைதானா?

எம் மக்களைச் சாட்டிப் பணத்தைப் பெற்று எம்மக்களுக்கு எதிராகவே செயற்படும் ஆரியரத்தினாவின் சர்வோதயம் தேவைதானா? எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சட்டப் பேரவை உறுப்பினர் வாயிலில் வைத்து சோதனை

நேற்று தமிழக சட்டப் பேரவையின் இவ்வாண்டின் முதலாவதுகூட்டத்தொடர் ஆரம்பமானது.

சபைக்கு வருவதற்கு முன்பாக சகல உறுப்பினர்களும் பேரவை வாயிலில் வைத்து உலோக கண்டுபிடிப்புக் கருவியால் பொலிஸாரினால் கடுமையான சோதனைக்குள்ளாக்கப்பட்டனர்.

பொலிஸாரின் இந்த நடவடிக்கை உறுப்பினர்களை அவமதிக்கும் செயலாகும் என தி. க. உறுப்பினர் செல்வராசன் பின்னர் கண்டித்து அறிக்கை வெளியிட்டார்,

# இலங்கை வங்கியும் நிதிக்கம்பனி நடத்தும்

இலங்கை வங்கியும் நிதிக்கம்பனி ஒன்றை நடத்தவுளது

மற்றொரு தனியார் வங்கியுடன் இணைந்து இது நடத்தப்படவுள்ளது

தற்போது சில நிதிக்கம்பனிகளில் மக்கள் நம்பிக்கையிழந்து வரும் இவ் வேளையில் இலங்கைவங்கி நடத்தவுள்ள புதிய நிதிக்கம்பனியில் மக்கள் முதலீடுகளை நம்பிக்கையுடன் மேற்கொள்வர் எனவும் இலங்கை வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன 22

## படையினரால் சேதம்

மூலைத்தீவு செயலகத்தில் இருந்துவந்த முக்கிய ஆவணங்கள் கோப்புக்கள் பலவும் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் முற்றாகச் சேதமாக்கப்பட்டுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்செயலகத்திற்குள் நிலைகொண்ட இராணுவத்தினர் அங்கிருந்த அம்மாவட்டத்திற்குத்தேவையான சகல முக்கிய ஆவணங்களையும் எரித்தும் கிழித்தும் நாசமாக்கப்பட்டிருப்பதாகதெரிவிக்கப்படுகிறது

## மீனவரின்...

நிலையத் தலைவர் எம். கே. செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் சென்றதூதுக்கோஷ்டி யாழ் அரசாங்க அதிபரிடம் மீனவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு பெற்றுக்கொடுக்கும் படியும் கேட்டுக்கொண்டது.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 26-ம் திகதி மீன்பிடிப்பதற்காகச் சென்ற குருநகரைச் சேர்ந்த இரு மீனவர்களும் பாஷையூரைச் சேர்ந்த நான்கு மீனவர்களும் மீன்பிடிப்படகுகளுடன் ராணுவத்தினரிடம் சிக்கிக் கொண்டனர் இவர்களில் அந்தோனியப்பு சில்வெஸ்ரர் (37), ஸ்ரீசுந்தரராசா சுந்தர் (19), மலர்நேசன் இராசகோன் 40), அம்புறோஸ் அன்ரன் (35) ஆகிய நால்வரும் பாஷையூரைச் சேர்ந்தவர்களாவர். 14

## காரைநகரில்...

வருவதாகவும், தேங்காய்க்கும் பதிலாக பாக்மா வகைகளையும் பாவித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோல தொழில் வசதியற்ற குடும்பங்கள் தமது உணவுத் தேவைகளைப் பூர்த்திசெய்ய பண வசதி இல்லாது பெருங் கஷ்டப்படுவதாகவும் தெரியவருகிறது. (06)

## டாட்டா—

வகிக்கப்படும் 22 தோட்டங்கள் புனரமைப்பின் கீழ் இவ்வாறு ஏலத்தில் விடப்படுகின்றன.

## கைப்பற்றப்பட்ட...

மகஸீன் - 01

★ ரி - 56 மகஸீன் - 15

★ ஜி - 3 ஏ - 3 மகஸீன் - 18

★ ரி - 81 மகஸீன் - 05

★ 7. 62 ஐ எம் ரவைகள் - 360

★ நேட்டோ ரவைகள் - 142

★ ஏ கே எல் எம் ஜி லிங் - 270

★ தொலைத்தொடர்புகருவி - 01

## மகஸீன்..

கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி மகஸீன் சிறைக்குச் சென்று தடுத்து வைக்கப்பட்டிருப்போர் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் தலைவருடன் நடத்திய சந்திப்பின் போது இத் தகவல் வெளியிடப்பட்டது.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் மீது ஊவாவில் கைதாகிக் கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டுள்ள 40 பேர் உட்பட ஜே. வி பி நடவடிக்கையின் போது 1989-ம ஆண்டு கைது செய்யப்பட்ட 17 பேரையும் அமைச்சர் சந்தித்தார். 14

## தமிழக—

கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவையே வெளிநடப்புச் செய்தவையாகும்

பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்ய வில்லையாயினும் அக்கட்சியைச் சேர்ந்த பண்ருட்டி ராமச்சந்திரன் கறுப்புச் சட்டை அணிந்தவாறு சட்டப்பேரவையில் இருந்தார்.

## பொலநறுவையில்..

மற்றுமோர் அணி தாக்குதலை ஆரம்பித்தது இதனால் விஜேதி இராணுவம் பின்வாங்கிச் சென்றது

இத் தாக்குதலில் பல ஆயுதங்கள் படையினரிடமிருந்து கைப்பற்றப்பட்டன.

இந்தத் தாக்குதலில் 12 படையினர் காணாமற் போய்விட்டதாகப் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி இந்திய வானொலி அறிவித்தது